# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரிதிங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 மாசித் திங்கள் 01–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.86/2016–இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 04/2025**

**S.அழகேசன்** ...**மனுதாரர்/வாதி.**

**எதிர்–**

**1. சுப்புலட்சுமி**
**2. உமாராணி**
**3. சித்ரா**
**4. கலா**
**5. சாந்தா** ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு C.ஜெயப்பிரகாசம்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு T.ரங்கநாதன்** அவர்களும் தோன்றினர். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்த-போது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

### முகவுரை

பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி தொடுத்த முதலேற்பு வழக்கில் விடுபட்டச் சொத்துக்களை வழக்குரையில் 05-ஆம், 06-ஆம், 07-ஆம் அட்டவணை சொத்துக்களாக புகுத்துவதற்கு வழக்குரையைத் திருத்த அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 06-ஆம் வகுமுறையின் 17-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/வாதி இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

III rd ADJ Court, Salem

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி. வழக்குக் சொத்தில் பாகப் பிரிவினை கோரி மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். முதலேற்பு வழக்கு வாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கெடுப்பிற்கு இருந்தது.வழக்கை நடத்துவதற்கு மனுதாரர்/வாதி தயாராக ஆனபோது இந்த மனுவுடன் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் வழக்குரையில் சேர்க்கப்படாமல் விடுபட்டது என்று தெரிய-வந்தது. வழக்குரை தயார்செய்வதிலும் வழக்கு நடத்துவதிலும் மனுதாரர்/ வாதி மிக கவனத்துடன் செயல்பட்டும் மேற்சொன்ன தவறுகை விளைந்து-விட்டது.

02. இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் 04-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்டச் சொத்துக்கள் ஆகும். அந்தச் சொத்துக்களை வாங்குவதற்கு 04-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எவ்விதமான வழிவகையும் இல்லை. பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி தொடுத்த இந்த வழக்கை முடிவுசெய்ய இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை வழக்குரையில் சேர்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சட்டப்படியும் பொருண்மைப்படியும் இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களில் மனுதாரர்/வாதியும் கூட்டுச் சுவாதீனத்தில் உள்ளார்.

03. இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை வழக்குரையில் குறிப்பிடாதது எதிர்பாராமல் ஏற்பட்ட தவறு ஆகும். இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை வழக்குரையில் சேர்த்து வழக்குரையை

திருத்துவதால் வழக்கின் அடிப்படை மாறாது. ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

**04.** மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய். மனுவில் கண்டுள்ள சொத்து 04-ஆம் பிரதிவாதியின் பெயரில் அவரது சொந்த பணத்தைக் கொண்டு கிரயம் வாங்கப்பட்டது. கிரயம் வாங்கப்பட்டதுமுதல் 04-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு சொத்துக்கள் சம்மந்தமாக வருவாய் துறை ஆவணங்களில் தன் பெயரை பதிவுசெய்து கொண்டு தனிபட்ட முறையில் அச் சொத்துக்களில் சுவாதீனங் கொண்டு அனுபோகம் செய்து-வருகிறார். எவ்வித முகாந்திரமுமின்றி மனுச் சொத்துக்களும் பாகப்பிரி-வினைக்கு உரிய சொத்துக்கள் என்று மனுதாரர்/வாதி கூறியுள்ளார். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

05. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**06.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்துக்கள் வாதி, 02 முதல் 05 வரையான பிரதிவாதிகளின் தகப்பனார் சித்தையனுக்குச் சொந்தமானதாக இருந்தது என்றும் சித்தையன் 01.09.2015-ஆம் தேதியன்று வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து விருப்பாவணம் எதுவும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் வாதியும் பிரதிவாதிகளும் சித்தையன் மனைவியுமான 01-ஆம் பிரதிவாதி-யும் வழக்குச் சொத்தில் தலைக்கு 1/6 பங்கிற்கு வாரிசுரிமை அடிப்படை-

யில் உரிமையாளர்கள் என்றும் அதனால் வழக்குச் சொத்தில் 1/6 பாகத்திற்கு வாதிக்கு பாகப்பிரிவினை வழங்கி ஆணையிடக் கோரியும் மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார்.

**07.** இம் மனு மூலம் வழக்குரையில் சேர்க்கக் கோரப்படும் சொத்துக்கள் 04-ஆம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதை மனுதாரர்/வாதியே மனுவில் ஒப்புக்கொண்டுள்ளார். மனுவில் கண்டுள்ள சொத்துக்களை கிரயம் வாங்குவதற்கு 04-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு தனிபட்ட வருமானம் இல்லை என்றும் அதனால் அந்த சொத்துமீதும் வாதிக்கு 1/6 பங்கிற்கு பாகவுரிமை உள்ளது என்றும் பொருள் -பட மனுதாரர்/வாதி மனுவில் சொல்லியுள்ளார்.

**08.** 04-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெண் ஆவார். அவர் பெயரில் உள்ள கிரயப் பத்திரங்களின் நகலை பார்வையிட்டபோது அவருக்குத் திருமணம் ஆன பிறகே அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது. திருமணமாகி சென்ற பெண் ஒருவர் திருமணத்திற்குப்பின் வாங்கிய சொத்துக்களும் அப்பெண்ணின் பெற்றோர் குடும்பத்தின் பொதுக் குடும்பச் சொத்து என்று வாதி சொல்வது இந்து வாரிசுரிமைச் சட்டம் அறியாத ஒன்று ஆகும். மேலும் அந்தச் சொத்துக்களை வாங்க 04 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு தனிபட்ட வருமானம் இல்லை என்று மட்டுமே மனுதாரர்/வாதி கூறியுள்ளார். வேறு எந்த விவரத்தையும் மனுதாரர்/வாதி சொல்லவில்லை.

**09.** இந்த மனுவின் சங்கதிகளும் சூழ்நிலைகளும் மனுதாரர் எவ்வித முகாந்திரமுமின்றி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார் என்றே கருத

வேண்டியுள்ளது. வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டி மனுதாரர்/வாதி இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார் என்று எதிர்மனு-தாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முன்வைத்த எதிர்வாதத்தை புறந்தள்ள முகாந்திரம் இல்லை. ஆகையால், மனுவை அனுமதிக்க முடியாது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

10. இறுதியாக, இந்த மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.13 17:55:47 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem